செய்தி வெளியீடு எண் : 2518 நாள் : 14.12.2023

**அயலகத் தமிழர் நலத்துறை**
**செய்தி வெளியீடு**

**"அயலகத் தமிழர் தினம் 2024" ஜனவரி 12, 2024, சென்னை வர்த்தக மையத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது. தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர், வணிகம், அறிவியல் தொழில்நுட்பம், விளையாட்டு மற்றும் மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் சிறந்து விளங்கும் அயலகத் தமிழர்களுக்கு விருது வழங்குதல்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12 ஆம் நாள் அயலகத் தமிழர் தினமாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்ததன் அடிப்படையில் 2022 மற்றும் 2023–இல் அயலகத் தமிழர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தொடர்ந்து மூன்றாம் ஆண்டாக "அயலகத் தமிழர் தினம் 2024" எதிர்வரும் 11.01.2024 & 12.01.2024 ஆகிய இரண்டு நாட்களில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் "தமிழ் வெல்லும்" என்ற கருப்பொருளில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில், பல்வேறு கலை நிகழ்ச்சிகள், அமர்வுகள், சிறப்பு கண்காட்சிகளுடன், நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் (Chennai Trade Centre) சிறப்பாக நடத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியை மேலும் சிறப்பிக்கும் விதமாக, தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர், வணிகம், அறிவியல் தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் சிறந்து விளங்கும் தமிழர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கரங்களால் "அயலகத் தமிழர் தினத்தில்" விருது வழங்கி கவுரவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, அயல்நாடுகளில் தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர், வணிகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய எட்டு துறைகளில் தலை சிறந்து விளங்கும் தமிழர்கள் அயலகத் தமிழர் நலத்துறையின் வலைதளத்தின் (https://nrtamils.tn.gov.in/en/) வாயிலாக, விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அயலகத் தமிழர் தினத்தில் பங்கேற்பது, மற்றும் நிகழ்வுகள் தொடர்பான பிற விவரங்களுக்கு (https://nrtamils.tn.gov.in/en/) கொள்ளப்படுகிறது. அயலகத் தமிழர் நலத்துறையின் வலைதளத்தின் வாயிலாக அறிந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in